DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.CC 43/2021

Prosecution witness – PW.1

| | | | |
|---|---|---|---|
| Name | :திருமதி.மோகனா | Caste: | |
| Husband's Name | : முனியசாமி | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

11.07.2025 – 11.45 AM

எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் சின்ன உடப்பங்குளம் கிராமத்தில் குடியிருந்து பூக்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். புகார்தாரர் கோட்டைச்சாமி எனது தங்கையின் மகன். அவர் தற்போது வெளிநாட்டில் வேலை செய்து வருகிறார். எதிரியை உள்ளூர்காரர் என்ற முறையில் தெரியும். சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் மாலை 04.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தேன். அப்போது எதிரே வசித்து வரும் கோட்டைச்சாமியின் வீட்டின் முன்பாக கோட்டைச்சாமிக்கும் வீரமருதுக்கும் சண்டை ஏற்பட்டது.

2. நான் வெளியில் சென்று பார்த்தேன். வீரமருது மதுஅருந்திவிட்டு கோட்டைச்சாமியை தேவிடியா மகனே அவுசாரி மகனே என்று ஆபாசமாக பேசினார். நான் சண்டையை பார்த்து விலக்கிவிட்டேன். என்னை வீரமருது கீழே தள்ளிவிட்டு காலால் நெஞ்சிலும், கழுத்திலும் மிதித்தார். எனக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது. பக்கத்தில் இருந்த எனது தம்பி நாகராஜ் என்பவரும் சம்பவத்தை பார்த்து வந்து சண்டையை விலக்கினார். அவரையும் வீரமருது அவரது வீட்டிலிருந்த கம்பை எடுத்து வந்து நாகராஜின் வலது கையில் அடித்தார். அந்த கையிலும் கடித்து வைத்து விட்டார்.

3. அருகில் வசித்து வந்தவர்கள் வந்து சத்தம் போட்டார்கள். ஆனால் எதிரி கேட்காமல் தொடர்ந்து ஆபாசமாக பேசிக் கொண்டிருந்தார். காயம்பட்ட

என்னையும், எனது தம்பி நாகராஜனையும் எனது கணவர் சிகிச்சைக்காக கமுதி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். அங்கு 3 நாட்கள் உள்நோயாளியாக நான் சிகிச்சை பெற்றேன். நடந்த சம்பவத்திற்கு கோட்டைச்சாமி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:– இல்லை.

(ஒம்./–திருமதி. G. தங்க கார்த்திகா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.